DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.254/2022 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | லெட்சுமணன் |
| Father's /Husband Name | : | வெங்கடேசன் |
| Village | : | போழக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11th day March 2024.
Accused present.

**முதல் விசாரணை**:-

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 14.07.2021-ம் தேதி மாலை 04.30 மணியளவில் நான் எங்கள் ஊர் சிவன் கோவில் குளத்திலிருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஆஜர் எதிரி என்னை குச்சிகாரி தேவுடியா மகனே என்று அசிங்கமாக திட்டி அனைவர் முன்னிலையிலும் அசிங்கப்படுத்தினார். அவ்வாறு அசிங்கப்படுத்திவிட்டு கட்டையால் எனது தலையில் அடித்தார். அதில் எனக்கு உச்சந்தலை உடைந்து ரத்தம் வடிந்தது. அப்பொழுது எதிரி என்னை பார்த்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். எதிரி என்னை தலையில் அடித்ததில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டு 8 தையல்கள் போட்டார்கள். (சாட்சி தலையில் உள்ள காயத்தை காண்பித்து சாட்சியமளிக்கிறார்) சம்பவத்திற்கு பிறகு நான் பேரளம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்துவிட்டு காயத்திலிருந்து ரத்தம் அதிகமாக வந்ததால் நான் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No.254/2022 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | முத்துலெட்சுமி |
| Father's /Husband Name | : | காத்தபெருமாள் |
| Village | : | போழக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 60 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11th day March 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்காரர். அ.சா.1ஐயும் எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் படிக்காததால் தேதி தெரியவில்லை. மாலை சுமார் 4.00 மணியளவில் எங்கள் ஊர் போழக்குடி கண்ணன் வீட்டு அருகே அ.சா.1 குளத்தில் குளித்துவிட்டு சென்று கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அவரிடம் பிரச்சனை செய்து ஒரு கட்டையால் அ.சா.1-ன் தலையில் அடித்தார். அதில், அ.சா.1-க்கு தலையில் இருந்து ரத்தம் வடிந்தது. அ.சா.1 எதிரி அடித்தபிறகு அங்கிருந்து பயந்துகொண்டு சென்றார். நான் அவரை காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கச்சொன்னேன். நான் தடுப்பதற்குள் அ.சா.1 ஐ எதிரி அடித்துவிட்டார். அதனை நான் நேரில் பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.